மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 465. டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

465—

ஜம்னாமருதூருக்கு சிறிய பேருந்து விடுதல்.

*1 136—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, ஜவ்வாது மலைப் பகுதியில் மேல்பட்டு, புலியூர் வழியாக ஜம்னாமருதூருக்கு தார் சாலை அமைத்து மினி பஸ் விடும் செய்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை 11 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. செங்கம் தொகுதிக்கு மட்டும் 6 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட இந்த 6 பஞ்சாயத்துக்களில் 15 ஆயிரம் மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கு வெளி மக்களிடம் தொடர்பு என்பதே சுத்தமாக கிடையாது. ஒரு வேளை அவர்கள் கீழே செங்கத்திற்கு வரவேண்டும். வாரத்திற்கு ஒரு முறை சந்தை பரமனந்தல் வரவேண்டுமென்றால் முட்புதர்கள் நிறைந்த ஒற்றையடிப் பாதையின் வழியாகத்தான் இவ்வளவு காலமாக வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே தான் பரமனந்தல் கிராமத்திலிருந்து மேல்பட்டு, புலியூர், விளாம்பூச்சி, கூட்டாத்தூர், கல்யாணமந்தை, பலாமருதூர், ஜம்னாமருதூர் வரை 30 கிலோ மீட்டர் தான் வருகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து ஜவ்வாது மலைக்கு தார்ச் சாலை போட பரிசீலனை செய்வாரா என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை மனதிலே கொண்டு 1980-வது ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையிலே புதிதாக தார்ச் சாலைகள் வனத்துறையில் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னால் மத்திய அரசினுடைய பரிந்துரையைப் பெற்றாக வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அத்தியாவசிய தேவையை மனதிலே கொண்டு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வேன் என்று சொன்னதற்கு என்னுடைய நன்றியறிதலை ஜவ்வாது மலைவாழ் மக்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வன வளங்கள் நெல்லிக்கனி, விளாம்பழம், மருத்துவ முக்கியத்துவம் பெற்ற டான்ட்ரிக்காய், புங்கன், கடுக்காய் மற்றும் மூலிகைகள் இதையும் மிஞ்சும் அளவுக்கு, தங்களுக்கே தெரியும், சந்தனம் அதிக அளவில் ஜவ்வாது மலையில் விளைகிறது. அது தான் அரசுக்கு பொருள் ஈட்டிக் கொடுக்கிறது, தமிழகத்தின் பொருளாதார நிலையையும் சீர்படுத்துவதும் எங்களது ஜவ்வாது மலைதான்.

நிதிப் பிரச்சினை இருப்பதை நானும் அறிவேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வேன் என்று சொன்னதற்கு நான் நன்றியைத் தெரிவித்திருக்கிறேன். ஏற்கனவே பலா மருதூரிலிருந்து அத்திப்பட்டு வரை தார்சாலை இருக்கிறது. அத்திப்பட்டிலிருந்து கல்யாண மந்தை வரை இப்போது அகலமாக எர்த் ஒர்க் செய்திருக்கிறார்கள். இப்பொழுது தார்ச் சாலை இல்லையென்றாலும் 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு, ஜல்லி சாலையாவது போட்டுக் கொடுக்க அன்புள்ளம் கொண்ட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா, பரிசீலிப்பாரா என்று கேட்க விழைகின்றேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய மொத்த மதிப்பீடு 150 லட்சம். அதிலே சுமாராக பயன்படுகிற கிராமம் 35 கிராமங்கள் மலைப் பகுதியாக இருக்கிறது. அதனுடைய தூரம் 35 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இதனை மனதிலே, கருத்திலே கொண்டுதான் தார்ச் சாலைகளாக மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசினுடைய அனுமதி பெற்றாக வேண்டும். சுற்றுப்புற சூழல் கெட்டு விடுமோ என்று இங்கே இருக்கின்ற வனத் துறையைச் சார்ந்தவர்கள் அதிலே பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, ஜவ்வாது மலையிலேதான் இந்திய நாட்டிலே

TRUTH ALONE TRIUMPHS

இல்லாத அளவிற்கு உயர்ந்த சந்தன மரங்கள் இருக்கின்ற காரணத்தினாலே, இதனாலே திருட்டுப் போகின்ற வாய்ப்பும், ஏற்படும் என்று விரைந்து வருகின்ற தார்ச் சாலைகளை அமைத்தால், விரைந்து வாகனங்களை வைத்துக்கொண்டு சந்தன கட்டைகளைக் கடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற நிலையும் இந்தத் துறையின் சார்பாக பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் மத்திய அரசுக்கு இந்த அரசு உடனடியாக பரிந்துரைச் செய்து, மத்திய அரசு அனுமதி தந்தால் அந்தப் பாதைகளை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 466, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

466—

அரக்கோணம்—செங்கல்பட்டு மின்சார இரயில்.

*16343—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பார் :—

அரக்கோணத்திலிருந்து காஞ்சீபுரம் வழியாக செங்கல்பட்டிற்கு மின்சார இரயில் விடுவதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரக்கோணத்திலிருந்து காஞ்சீபுரம் வழியாக செங்கல்பட்டிற்கு மின்சார இரயில் விடுவது பற்றி தற்போது எதுவும் பரிசீலனையில் இல்லை எனத் தென்னக இரயில்வே தலைமை திட்ட மேலாளர் தெரிவித்துள்ளார். எனவே, இது குறித்து மத்தியஅரசை வற்புறுத்த அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எனக்கு இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் குறிப்பிட்டதை போல, நான் நாடாளுமன்றத்திலே இருக்கின்ற நேரத்திலே பலமுறை வலியுறுத்தி அதற்கு செயல்வடிவம் தருவோம் என்று தென்னக ரயில்வே மூலமாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது.